உளி- 1 | ஓசை-47 | ஜனவரி-2021 | திங்களிதழ்

படைப்பு

# கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



www.padaippu.com

ஆசிரியர் : ஜின்னா அஸ்மி

நிர்வாகக் குழு :
சகா (சலீம் கான்)
இப்ராஹிம் ஷரீப்
ஜெ. ராஜா ஜெயகரன்

ஆசிரியர் குழு :
படைப்பு தேர்வுக்குழுமம்

இதழ் உருவாக்க உதவி :
ஷெண்பா
மதன் குமார்

வடிவமைப்பு :
முகம்மது புலவர் மீரான்

இணையதள முகவரி :
www.padaippu.com



அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
அரசு பதிவெண்: 521/2018
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்,
கடலூர்,
தமிழ்நாடு,
இந்தியா.
607002
admin@padaippu.com
✆94893 75575


படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வுசெய்யப்பட்டவை
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வர வேண்டுமெனில் முகநூல் படைப்பு குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

| | |
|---|---|
| இரா.பூபாலன் | - 4 |
| கோவை சசிகுமார் | - 5 |
| பெருமாள் ஆச்சி | - 6 |
| த.பு | - 6 |
| பொள்ளாச்சி முருகானந்தம் | - 7 |
| சந்துரு | - 8 |
| ப.தனஞ்ஜெயன் | - 9 |
| அன்பூ | - 9 |
| அழ.இரஜினிகாந்தன் | - 10 |
| சகா | - 11 |
| தி.கலையரசி | - 12 |
| இரா அபர்ணா | - 13 |
| யுகயுகன் | - 14 |
| சரண்யாசத்தியநாராயணன் | - 15 |
| சுரேஷ்பாபு ராசேந்திரன் | - 15 |
| ஜே.ஜே.அனிட்டா | - 16 |
| ராம் பெரியசாமி | - 17 |
| ப்ரியா பாஸ்கரன் | - 18 |
| க.ராஜகுமாரன் | - 18 |
| பிரேம பிரபா | - 19 |
| லாஸ்யா | - 19 |
| மின்மினி விமலா | - 20 |
| மா.காளிதாஸ் | - 21 |
| கோ.ஶ்ரீதரன் | - 22 |
| தமிழ்க்குமரன் | - 22 |
| காயத்ரி ராஜசேகர் | - 23 |
| அகதா | - 24 |
| ரிஸ்கா முக்தார் | - 24 |
| சுப.முத்துக்குமார் | - 25 |
| கனகா பாலன் | - 25 |
| ம.கனகராஜன் | - 26 |
| சௌவி | - 27 |
| ரா.ராஜசேகர் | - 28 |
| ப.ராஜகுமார் சிவன் | - 29 |
| கார்த்திகா அ | - 30 |
| கோ.லீலா | - 30 |
| ப.தாணப்பன் | - 30 |
| செந்தாரப்பட்டி இரா.செல்வக்குமார் | - 31 |
| வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன் | - 31 |
| சரண்யா | - 32 |
| பிருந்தா சாரதி | - 33 |
| ப்ரியம் | - 34 |
| மதுசூதன் | - 35 |
| முனியாண்டி ராஜ் | - 36 |
| ஜே.பிரோஸ்கான் | - 37 |
| கோபி சேகுவேரா | - 38 |
| இளங்கோ குமாரசாமி | - 38 |
| ஜ.தர்மசிங் | - 39 |
| குமரன்விஜி | - 39 |



பெருவணிகவளாகத்தின்
பிரம்மாண்ட நகைக் கடையொன்றின்
கண்ணாடிக் கதவுகள்
தாமாகத் திறந்து மூடுகின்றன
முதல் முறை கடைக்கு வந்த சிறுமி
அதன் முன்னர்
கண்கள் விரிய
சற்று நேரம் நின்றிருந்தாள்
பெரியவர்கள் நகைகளில்
மூழ்கிய தருணத்தில்
உள்ளேயும் வெளியேயும்
நடந்து நடந்து பார்க்கிறாள்
பத்தாவது முறையும்
முகம் கோணாமல்
திறந்து வழிவிடுகிற கதவுகள்
மந்திரக் கதவுகள் என நம்புகிறாள்
மாளா வியப்பவளுக்கு
குதூகலமாக அவள் அதனோடு
விளையாடுகிறாள்
மிகப் பிடித்த அந்தக் கதவுகளை
முத்தமிட வேண்டும் போல
தோன்றியிருக்கிறது அவளுக்கு
அவை சதா திறந்து மூடப்
பணிக்கப்பட்டவை
ஒரு முத்தமிட அவகாசம் தராமல்
அருகில் சென்றாலே
உள்ளோடிக் கொள்கிற
கதவுகளை
ஏக்கமாகப் பார்த்தவள்
கிளம்புகையில்
வாசற்படியினின்று
ஒரு பறக்கும் முத்தமிட்டாள்
கண்ணாடிக் கதவுகள்
ஒளிச் சிரிப்பொன்று
சிரித்தாகப் பட்டது

◆ *இரா.பூபாலன்*



நட்சத்திரங்களைக்
கட்டி இழுத்தவண்ணம்
நிரம்பி வழியும் கூடைக்குள் நிரம்பியிருக்கின்றது
மௌனம்

குப்பியிலிருந்து
நீர்க்குமிழிகள்
பல வர்ணங்களில்
சிதறினாலும்
உடையும் போது
தெறிக்கின்றது
மெல்லிழைக் கனவுகள்

மகரந்த வாசனையில்
மதுவினைச் சுரந்து
வண்டின் வருகைக்காக
காத்திருக்கும் மலருக்கு
காமமில்லையென்று
யார் சொன்னது?

இலைப் பரப்பின்
கடைக்கோட்டில் தொங்கிக்
கொண்டிருக்கும்
பனித்திவலையைக் கவர்ந்திழுக்கும் கவர்ச்சியில்
இளம்காலைப் பொழுது

புரிதலற்ற மொழியின்
சம்பாசனைகளின் பிரியங்களில்
முத்தமிடும் மழலையின்
உதட்டோர ஈரத்தில்
நனையும் தாய்மை

இத்தனையும் ரசித்து
வார்த்தைகளைப் பிணைத்து வாசிக்க வைப்பவனை
என்னவென்று சொல்வீர்கள்?

◆ ***கோவை சசிகுமார்***



மாலை வேளைகளில் கதவடைக்காதீர்
மகாலெட்சுமி வருவது தடைபடும் என்றனர்
கிராமத்துப் பெரிசுகள்

திறந்தே இருந்த கதவுகளற்ற வீடுகளில்
மகாலெட்சுமி வந்த சுவடுகள்
காணவே இல்லை..

கூரை வீடுகளைத் தவிர்த்த மகாலெட்சுமி
காரை வீடுகளில் வசதியாக வந்து
சென்றிருக்கலாமென
பின்னாளில் நானுணர்ந்தேன்..

ஏழைகளின் வீட்டு விலாசங்களைத்
தேடிக் கண்டு பிடிப்பதில் சலிப்புத் தட்ட
மாட மாளிகைகளில் மட்டும் தங்கிக்கொள்கிறாள்
போலும்

கதவடைத்தே இருக்கும் பெரும் பணக்காரர்கள்
வீடுகளுக்குச் சிரமமின்றி வந்து செல்லும்
மகாலெட்சுமி வறியவர்களின் வாசலையாவது
திரும்பிப் பார்த்து விட்டுச் சென்றிருக்கலாம்.

◆ *பெருமாள் ஆச்சி*

அந்த பருவத்தில்
எனக்கு கவிதையென்றால்
என்னவென்று தெரியாது

நெருப்பில் விரல் வைத்த
பிறகுதான் நெருப்பிலிருக்கும்
இதம் புரியவந்தது எனக்கும்

கவிதையோடு உறங்குகிற காரணத்தால்
எனக்கு கவிதை எழுத வருகிறது

என் பக்கத்து
பூந்தையல் தலையணையில்
என்னோடு உறங்குற
குளிரையும் தனிமையையும்
ரசித்து ரசித்துதான்
இப்போதேல்லாம் எழுதுகிறேன்

எனினும் கவிதையென்றால்
என்னவென்று தெரிந்துவிட்ட
இப்போதெல்லாம் விரல்கள்
நடுங்குகின்றன

அவ்வளவு தகனமான
கவிதை ஒன்றை கொஞ்சம்
தள்ளிப்போடுகிறேன்..

◆ *த.பு*

# புத்தனின் மிஸ்டு கால்...



நிறைய நொந்து கிடக்கிறோம்
உங்கள் ஸ்மைலியை
ரசிக்க முடியவில்லை
முகத்துக்கு நேராய்
கொஞ்சம் தள்ளி பிடியுங்கள் மொபைலை
என்றவாறே........

எங்கள் ஹெட் போன் உரையாடலில்
செடி நடப்பட்டது ஹை வேஸா என்றான்....
யார் தண்ணீர் ஊற்றுவது
யார் வேலி போடுவது
யார் மெய்ன்டேன் செய்வதென
நிறைய கேட்க கேட்க.....
நான் தலையசைக்க தலையசைக்க....

நாங்கள் செடி நட்டது
நாளை பேப்பரில் படத்தோடு வருமெனச்
சொல்ல....

யார் நட்டது
போன முறை வந்த
அதே தாசில்தாரா என்ற போது...

ஒரு செடி கிடைத்தது
அது மரமென உறுதி செய்து
கொண்டேன்....

அன்றைய பெருங்கனவில்
என் செடியை முன்பதிவு செய்ய
புத்தனொருவன்
சேம்ஸங் ஏ செவன்டி அலைபேசியில்
மிஸ்டு கால் கொடுத்தான்..
அவ்வளவு சந்தோசம்
பேசத்துவங்கினேன்....
பேச்சு நீள
வீடியோ காலில் இணைந்து கொண்டோம்....

இப்போது
இல்லையென்பது போல
அகல வாக்கிலோ

ஆமாவென்பது போல
நீள வாக்கிலோ

என் தலையசைப்பதைத் தவிர
எதுவுமே தெரியவில்லை...

நல்லவேளை
அந்த செடிக்கு செல்போன்
பேசத் தெரிந்திருக்கவில்லை....

◆ *பொன்னாச்சி முருகானந்தம்*

# கணக்கிலெடுக்காத கண்ணீர்த்துளிகள்



அழைக்காத மரணத்தின் கைகளில்
வலிய ஒப்புக்கொடுத்து
நடிகையொருத்தி
மரித்துக் கிடக்கிறாள்...
அகாலத்தின்
அடைப்புக்குறிகளுக்குள்
அடங்கிப்போனவள் உடலை
அறுத்துப் புதைத்த பின்னும்
செய்திகளின் பசிக்காக
தினம் தினம்
தோண்டியெடுக்கப்படுகிறாள் அவள்...
புலனாய்வின் பக்கங்களை நிரப்ப
அவள் சஞ்சரித்திராத
இருளுக்குள் விருப்பமாய் நுழைந்து
அவளின் தடயங்கள் தேடுகிறார்கள்
அவள் அந்தரங்கத்தின் பக்கங்களை
ஆளுக்கொன்றாய்
யூகங்களின் சொற்களால்
அடுக்குகிறார்கள்
குடும்பச் சிக்கல்களை
கூடித் துழாவுகிறார்கள்...
பழகிய நண்பர்களை
பட்டியலிடுகிறார்கள்...
குழந்தையாய் அவள்
புன்னகைத்த இடங்களிலும்
காதலின் முத்திரையை சேகரிக்கிறார்கள்
அவள் உதட்டுச்சாயம்
வழித்துப்போட்ட காகிதத்தில்
காமத்தின் குறிப்புகள் தேடப்படுகிறது...
இறந்து போனவளின்
இறுதி நிமிடத்து இயலாமைகளை...
கடைசி நேரத்து கண்ணீர்த்துளிகளை
கணக்கிலெடுக்க விரும்பாமல்
உடல் சார்ந்த தகவல்களால் மட்டுமே அவள்
உலாவர வேண்டுமென்றே
விழைகிறார்கள்..
இறப்புக்குப் பின்னும்
விலையிருப்பதால்
காதலுக்கும் காமத்துக்கும் நடுவே
திரும்பத் திரும்ப
அவள் உருட்டப்படுகிறாள்...
எதிர்பார்த்த சுவாரஸ்யம் ஏதுமில்லாத
அவள் அந்தரங்கம் அறிந்திருந்தும்
ஊடக வியாபாரத்துக்காக
தினந்தோறும் ஊதிப்பெருக்கும்
செய்தியாளனுடன் சேர்ந்து
எதுவும் புலப்படாத
அவளது அந்தரங்க இருட்டுக்குள்
கண்களைச் சுருக்கி
எல்லோரும்
எட்டிப்பார்த்துக் கொண்டிருக்கிறோம்...

◆ *சந்துரு*

# எல்லா மாதமும் இப்படிதான்



மார்கழியில் பூசனி பூவையும்
டிசம்பர் பூவையும்
சந்திக்க வைக்கிறாள்
அதிகாலைப் பனியில்
கலர் கோலமிடும் பெண்
பூசனி பூ சொல்லியது
எனக்கு மட்டும் சாணம் மகுடம்
உனக்கோ அழகான பெண்களின் ஈரத்தலை
மகுடம் என்றது
டிசம்பர் பூ சொல்லியது
பெண்களின் துன்பங்களை
இந்த குளிரில் பார்க்க ஆரம்பித்து
நாள் முழுவதும் உறைந்து போகிறோம் நாங்கள்

வாசலில் கம்பீரமாய்
நிற்கும் நீதான் அழகு என்றது
அதைக் கேட்ட
பூசனி பூ புன்னகை செய்தது

பனிகாலப் பூக்கள் உதிர
டிசம்பர் விடைபெறப்போகிறது.

◆ *ப.தனஞ்ஜெயன்*

இன்னும் எழுதப்படாத
என் கவிதைக்குள்
ஒளிந்திருக்கும்....
நீயின்னும் வாசிக்காத
வார்த்தைகளுக்குள் தான்...
மிச்சப்பட்டுக் கிடக்கிறோம்
நீயும் நானும்...
பிறகு நாம் நேசமென்று
நினைக்குமொன்றும்.

◆ *அன்பு*

# பள்ளியெழுச்சி

மெர்சிடிஸ் பென்ஸ்
பிஎம்டபிள்யூ ஆடியென
வாசலில்
வரிசை கட்டி நிற்கும்
கார்களுக்கு முன்னே
பூச்செண்டுகளோடு
காத்திருக்கும்
அனிலுக்கும் முகேஷுக்கும்
அமிதாப்புக்கும் நடுவே
ராகுலும் மோடியும்
நடந்துவர....
பர்மா தேக்கும்
இத்தாலியன் மார்பிள்ஸும்
பதித்துக் கட்டிய
விசாலமான வரவேற்பறை
சோபாக்களில் பொதிந்தபடி
நகங்கடித்துக் காத்திருக்கும்
நயன்தாரா தமன்னா
இலியானாக்களை
உதாசீனப் பார்வையோடு
கடந்துவந்து..
டொனால்டு ட்ரம்பின்
தோள்மீது கைபோட்டபடி
அரபு ஷேக்குகளிடம்
எண்ணெய் பரிவர்த்தனை
செய்து கொண்டிருக்கும்
வேளையில்தான்
“ ரேசனில்
கிஸ்னாயிலும் அரிசியும்
போடறாங்களாம்
போய் வாங்கிக்கினு
வாடான்னா
இன்னாடா எரும மாடு கணக்கா
தூங்கினுக்கீறே,”
என
சொம்புத் தண்ணீரை
முகத்தில் அடித்து
எழுப்புகிறாள் -
அம்மா.......!



◆ *அழ. இரஜினிகாந்தன்*

# என்றாவது எழுதிவிட வேண்டும்



வந்திறங்கிய வார்த்தைகளை
அடுக்கி வைக்கிறேன்...
வரிசைக்கிரமமாக,
தனித்தனியாக,
தகுந்தாற்போல் இடம் மாற்றி,
ஜோடி சேர்த்து...

எத்தனை தடவை
படித்துப் பார்த்தாலும்
ஒவ்வொரு முறையும்
வெவ்வேறு கோணத்தை
தெளிப்பித்து அடங்குகிறது...

ஆனாலும்,
விழுந்த வார்த்தைக்கு
வேறு இணை தேடுகிறேன்
புதிய பொருள் சொல்ல அல்ல,
பார்வையை திசை திருப்ப...
பார்க்கும் கோணத்தை அழகுபடுத்த...

குடியேறிய சொற்களோ
முரண்பட்டு நிற்கிறது
தேடி எடுத்த வார்த்தைகளோடு...
சரி எப்படித்தான் எழுதுவது?

சந்தத்தோடு எழுதிப்
பார்க்கலாம் என்றால்
சத்தமில்லாமல் போய்விடு
என்கிறது சந்தம்...

என்றாவது ஒரு நல்ல கவிதையை
எழுதிவிட வேண்டும் என்று
போராடிக் கொண்டிருக்கிறேன்...

◆ *சகா*



நகரத்தில் இருந்து
சொந்த ஊருக்கு வந்து
திரும்பும் போதெல்லாம்
கிலோ கணக்கில்
முள் கத்திரியும்
வெண்டை பிஞ்சுகளும்
இளநீர் காய்களும்
நாட்டுக் கொத்தமல்லி கட்டுகளும்
பை நிறைய வாஞ்சையாய்
நிரப்பி அனுப்பி வைக்கிறது
பூர்வீக உறவு...

கடன் கேட்டு வந்தால்
விவசாயக் கடன் வாங்கியாவது
கை கொடுத்து உதவுகிறான்
ஒன்றுவிட்ட பங்காளி...

உளைச்சல் களைய ஊர் தேடி
போனால்
சாமரம் வீசி தாலாட்டு பாடுகிறாள்
ஊர் கிழவி...

வாழ்க்கை
கிளை விரித்து உயரே
நகர்ந்தாலும்
மண்ணோடு சேர்த்தணைத்து
கெட்டியாகப்
பிடித்துக் கொண்டிருக்கிறது
விதையின் வேர்கள்.

◆ ***தி.கலையரசி***

# விரட்டப்பட்டவர்களின் விருந்து நாள்



**கோ**ழிக் குழம்பென்றால் அப்பாவிற்குக்
கொள்ளைப் பிரியம் என்று
தன் கையால் சமைத்து
தலைவாழை இலை போட்டு
பக்குவமாய் வடித்த சாதம் கொட்டி
கரண்டி நிறைய குழம்பெடுத்து
அதில் ஊற்றினாள் மகள்!

'மாமா பருப்பு வடை விரும்பி சாப்பிடுவார்'
என்று சொன்ன மருமகள்
சுடச்சுட வடை பொறித்து வந்தாள்!

தாத்தாவுக்குப் பிடிக்குமென்று
பேத்தி வேகவைத்த தட்டைப்பயறு
இலையோரம் அழகாய் இடம்பிடித்தது!

ஐயர் கடை பால்கோவா
ஊர்ச் சந்தை கைமுறுக்கு
கோவில்பட்டி கடலை மிட்டாய் என
அத்தனையும் வாங்கி அடுக்கி வைத்தான் மகன்!

இலை நிரம்பியது
பரிமாறிய மனம் நிறைந்தது
'அப்பாவ கூப்டுப்பா' என்றார்
நரைத்த தலை ஆசாமி ஒருவர்!

காஞ் காஞ் என்று
தந்தையை ஆகாயத்தில் தேடிக்கொண்டிருந்தான்
மகன்!
சாப்பிட மணி பார்த்துக் கொண்டிருந்தது குடும்பம்!

கண்ணாடிச் சட்டத்தில் அடைக்கப்பட்டு
சுவரில் தொங்கிக் கொண்டிருந்த
அப்பாவின் நினைவுகள்
காக்காவைப் போல் வெறுத்து
விரட்டப்பட்ட தன் இறுதி நாட்களை வட்டமிட்டது!

◆ *இரா அபர்ணா*



ஆவல் ததும்ப கொண்டு வந்து
முற்றத்தில் நட்டு வைத்தேன்
அழகு செடியொன்றை

நீரூற்ற மறந்த பொழுதுகளில்
அது தன் கண்ணீரைக் குடித்து வளர
கற்றுக் கொண்டது

பறவைகள் வந்து எச்சமிட்டன
முகம் சுளித்தேன்
கனிவதை கைவிட்டது

அதன் சிறு கிளையில்
என் ஆடை சிக்கிய தருணத்தில் எரிச்சலுற்றேன்
கிளைப்பதை கைவிட்டது

முதிரிலைகள்
முற்றத்தில் அலைந்தன
அலுத்துக் கொண்டேன்
துளிர்ப்பதை கைவிட்டது

அன்பின் அடைமழை கால நினைவுகளைப்
பற்றிக் கொண்டு ஒற்றைக் காலில் நிற்கிறது
மொட்டை மரமாய்

அதன் வேர் அகழ்ந்து கொண்டிருக்கிறேன்
ஆசை ஆசையாய் வளர்த்தேன்
சனியன் பட்டுவிட்டது என்றபடி

தகவமைப்பின் தற்கொலைப் பாறை
மீதிருந்து ஓர் உடல் சரிகிறது.

◆ *யுகயுகன்*



நீண்ட நாள் வாடை
பூனை முழுதாய்
விழுங்காத எலியோ
ஏதோ ஒரு வீட்டிலிருந்து
நாய் எடுத்துவந்து
வீசிசென்ற
மாமிசத்தின் எச்சமோ
தரையில் அடித்து
தூர எறிந்த பூனையோ
காகம் தவறவிட்ட
மீன் துண்டோ
வாகன சக்கரத்தில்
பிதுங்கிய தவளையோ
நீண்ட காலமாக
கவனிக்காமலிருக்கும்
முதியவரின்
மரண படுக்கையோ
யாரும் காண முயற்சிக்காத
ஒரு கைம்பெண்ணின் இரவுவோ...

◆ *சரண்யாசத்தியநாராயணன்*

சுமப்பதை
காட்டிலும்
இறக்கி
வைப்பதில்
கனக்கிறது...
மனதின் பாரம்.

◆ *சுரேஷ்பாபு ராசேந்திரன்*

# வல்லூறு



நிறங்கொத்திகள் பருகும்
மதுக் கிண்ணத்தின் விளிம்பில்
உயிர் வளர்ப்பவன் நீ..

புழுக்களின் மந்தையில்
செம்மறியாக நழுவும் உனக்கு
மூன்று பக்கமும் சுவர்கள்.

இரவாமல் பெற்றதை
இரவல் தந்து விட்டு
உறக்கத்தின் குறைகளோடு
பகட்டுப் பகலாடுகிறாய்.

நாடோடி போல்
களிக் கூத்தாடும் நிகழ்நிலை பிறழ்ந்து
கரங்களில் தவழும் போது
இறந்த காலத்திற்காக
துக்கம் அனுசரிப்பவன் நீ..

எழுந்து நட என்பேன்.
அழுந்த வாழ்ந்து பார் என்பேன்.
இரண்டுக்கும் நடுவே இராதே
ஏதுமற்றே திரி என்பேன்.

எல்லாவற்றுக்கும் உன்னிடம்
பதிலொன்று தான்.

உனக்கு அன்பைத் தவிர
வேறொன்றும் தெரிவதேயில்லை.

◆ *ஜே.ஜே.அனிட்டா*

# மீன்கள் குறித்த தேதி



மீன்களை கைகளில் உறங்க
வைத்திருந்தேன்
செதில்கள் உள்ளங்கையில் ஒரு குறிப்பை எழுதி
வைத்திருக்கிறது

ஒரு கடலும் ஒரு வானமும் சில
பருவமழைகளையும்
சேர்த்து வரையப்பட்டிருக்கிறது

மீன் குஞ்சுகளால் கட்டப்பட்டிருந்த கூட்டின்
இழைகள் வலைகளால் பின்னப்பட்டவை

ஒரு துறவியின் கைகளை விட தூய்மையான
மீன்களின் உடம்பில்
நிறைய வண்ணக் கோடுகள்

தூண்டிலில் தொங்கவிடப்பட்ட புழுவிற்கு மண்ணின்
மீது நிறைய கனவுகள்

உறக்கத்திலிருந்து
விழித்துப் பார்க்கிறேன்

கண்ணாடி தொட்டிக்குள்
மீன்கள் குறித்த தேதியில்
என் உடல் மிதந்து கொண்டிருக்கிறது

உடல் முழுக்க நிறைய வண்ணக் கோடுகள்

◆ *ராம் பெரியசாமி*

# மெட்டோடு மொட்டு



பெட்டையொன்று சென்றது பிஞ்சுகளின்
ஊண்தேட;
சிட்டுகள் பாடவே செல்லமாய் - மெட்டோடு;
மொட்டு விரிந்து மலர; அவைகள்கை
தட்டி மகிழ்ந்தது தான்

◆ *ப்ரியா பாஸ்கரன்*

திசைகள் தின்று செரித்த ஒற்றையடிப்பாதை உன்
ஞாபகம்

என் அருகே நகரும்
இந்த இரவு
இரக்கமில்லாமல் நிலா நட்சத்திரங்களோடு
வாழ்கிறது

உன்னை நினைத்தபடி இருப்பதுதான் என்
துயரத்திற்கு வாய்த்த வாழ்வு

கதை முடிந்துவிட்டது
முற்றுப்புள்ளியை தாண்டி நிற்கிறது வாழ்வு..

◆ *க.ராஜகுமாரன்*

# இரவு அரக்கன்



பனி போர்த்திய ஒரு பின் இரவில்
உடல் வருத்தும் கூர்முனை போர்த்திய
நெருஞ்சிமுட்காடு.
துளியும் முனை பிளவாத முட்களால்
வின்மீன்களைத் தேர்ந்தெடுத்து
தன் கருப்புச் சட்டையில்
பதித்துக் கொள்கிறான்
மிகவும் நேர்த்தியாக இரவு அரக்கன்.
இருளைத் தூர்வாரும் பகலவனின்
தொடர் முயற்சியில்
நட்சத்திரச் சாட்டை
அடிவானத்தில் தோன்றி மறைய
விடியலின் ஒளிச்சாற்றில்
வெகு நேரம் வரை
நெருஞ்சி முள் வாசம்

◆ *பிரேம பிரபா*

மாதத்திற்கொரு அவதாரமென
மாறி மாறி காட்சி தரும்
கடவுளுக்கு வேலை தரும் பொருட்டு...
தான் செய்யும் அனைத்துமே
பாவமென எண்ணி கணக்குகளைக் கூட
கடவுளிடமே விட்டுவிட்டு ...
பாவத்தைக் கழிக்க கோவில் கோவிலாய்
செல்கிறார்கள் மனிதர்கள்!!!

தன்னையே கேட்காமல்
இத்தனைவிதமாய்
உருவம் செய்து வைத்தவன்
இப்பொழுது எந்த ரூபத்திலாவது
வருவான் என
அவனைத்தேடிக் கொண்டேயிருக்கிறது
இருட்டான கருவறையில்
இயல்பு மாறிய கடவுளின் விழிகள்!!!!

◆ *லாஸ்யா*



மூடிய இமைகளின்
வெளிச்சப் புள்ளிகளுக்கிடையில்
சில கனாக்களுக்கான முயக்கம் !

மௌனித்த நினைவுகளின்
பிரபஞ்ச வெளிகளில்
வாகைப் பூக்களின்
நறுமணம் வீசுகிறது !

நுகர்ந்து நகரும் கணங்களில்
ஏதேன் பூக்களின் மலர்ச்சி
உயிர் செல் யாவினும் !

வெட்டவெளிச் சுதந்திரத்தில்
இன்மையின் ரூபங்களற்ற
மின்மினிப் பூச்சியாய்
இருளுக்கு ஒளியேற்றுகிறேன் !

கனத்த மழையின் சாரல் போல
மனவெளியெங்கும் நட்சத்திரப் பூக்கள்
நனைத்து நனைந்து விளையாட
பால்வீதியெங்கும் ஒளிவெள்ளம் !

நழுவி வழுவி ஓடும்
பெருநதி மனதின் பிரவாகத்தில்
குளிரக் குளிர மிச்சமிருக்கிறது
இன்னும் சில கனவுகள் !

ஒவ்வொரு கனவின் முயக்கத்திற்கும்
ஒவ்வொரு விதமாய் உயிர்க்கிறேன்
உலகறியாத நான் !

என் வெளிச்சப்புள்ளிக் கனவுகளில்
நான் என்பது
நான் மட்டுமேயல்ல...!

◆ *மின்மினி விமலா*

# வார்த்தைகள்



தொழதொழ சட்டையைப் போல
ஒட்டியும் ஒட்டாமலும் இருக்கிறது
அவசர ஆத்திரத்தில் கொட்டியவை.
காலர் மட்டும் நைந்ததைத்
தூக்கிப் போட மனமில்லாத மாதிரி
உறுத்திக் கொண்டே இருக்கின்றன சில.
அவ்வளவு எளிதில்
கறை நீங்கிவிடுமென்பதற்கோ
ஒரு சொட்டில் பளிச்சிடும் என்பதற்கோ
உத்தரவாதம் தராதவையே கொப்பளிக்கப்படுகிறது.
நவீனம் என்ற பெயரில்
மௌனமாகக் கடைவிரிக்கப்படுவதும் பழைய
வகைமைகளே.
நெடுநாளாய் உடுத்தாததிலிருந்து
பொடிப்பொடியாய் உதிர்வது
வெறுப்பின் வீரியமாகவும் இருக்கலாம்.
சோப்புநீரில் அலசிப் பிழிந்த சட்டையிலிருந்து
கறுப்பாக வழிகிறது
வீடு முழுக்க விரவிக் கிடந்த
கெட்ட வார்த்தைகள்.
வயற்காட்டுப் பொம்மையின் சட்டைப்பையில்
மிச்சமிருந்த
ஆறுதல் வார்த்தைகளையும்
கொத்திப் போகிறது காலக் காகம்.

◆ *மா.காளிதாஸ்*

நடை பயிற்சியுனூடே
என் கண்ணுக்கு மட்டுமே
இடறிய
அப்பொடியன்
துணிப்பையினுள்ளிருந்து
ஆடம்பரமிலா
இத்தெருவோரம்
நடக்க தெரியா
அந்நாய் குட்டியை கொணர்ந்து விடுகின்றான்
புடைத்திருந்த தன் டிராயர்
பாக்கெட்டிலிருந்து
ஒரு மொத்த பால் பாக்கெட்டை உடைத்து
பிளாஸ்டிக் டப்பாவில் ஊற்றி
அக்குட்டி வாஞ்சையாய் பால் குடிக்கும் வரையிலும்
நின்று ரசித்து விட்டு
சைக்கிளிலில்
விரைந்து மிதிக்கின்றான் எங்கோ ஒரு
ஏற்புடையதாய் இல்லாமலிருக்கும்
அவன் வீடு தேடி
சொல்லி புரிய வேண்டுமா
அது ஒரு தெரு நாய் போட்ட குட்டியென
சொல்லாமலே புரிய வேண்டுமே
அவன் வீடெதிர்த்துதான் அதை வளர்க்க
திட்டமிட்டு தோற்றிட்ட
என் போன்ற பால்ய நிராசை ஒன்றை....

◆ ***கோ.ஸ்ரீதரன்***



யாரோ ஒருவர்
வாங்கி கொடுத்த
சோற்றுப் பொட்டலத்தில் பாதியை
தெருநாய்க்குப் போடும்
பைத்தியக்காரரின் முகத்தில்
கடவுளின் சாயல்

◆ ***தமிழ்க்குமரன்***



எனக்கு பட்டாம்பூச்சிகளை
மிகவும் பிடிக்கும்
வைத்தகண் வாங்காமல்
பார்க்கப் பிடிக்கும்
மினுங்கும் ப்ளாஸ்டிக் பட்டாம்பூச்சிகளை வாங்கி
பீரோவிலும் ஃப்ரிட்ஜிலும் ஒட்டி வைத்திருப்பேன்
ஓர் இரவு தூக்கம் வராமல் புரளும்போது
மின்விசிறியின் காற்றில்
அது அசைகிறது
இதுவரையிலும் அது அசைவதை
இவ்வாறு பார்த்து ரசிக்க
நேரம் இருந்ததில்லை போல
பூவும் இல்லாமல்
ஒரே இடத்தில் படபடத்துக் கொண்டிருக்கும்
பட்டாம்பூச்சியைப் பார்த்தபோது
தேவையில்லாமல்
பால்யத்தில் நண்பனொருவன் பட்டாம்பூச்சியைப்
பிடித்து
இறகில் குண்டூசி பதித்து
சித்ரவதை செய்தது
ஞாபகம் வந்துவிட்டது
ஒரே இடத்தில் துடித்த பட்டாம்பூச்சியும்

மறுநாள் முதல் வேலையாக
பீரோவிலும் ஃப்ரிட்ஜிலும் ஒட்டியிருந்த பட்டாம்
பூச்சிகளை
கண்காணாமல் மறைத்துவைத்தேன்
நிம்மதிப் பெருமூச்சோடு

மகளின் பிடித்த சட்டையில்
நிச்சலனமாயிருந்த பட்டாம்பூச்சி அச்சில்
பால்யத்தில் மறுநாள் இறந்து அசைவற்றுக் கிடந்த
பட்டாம்பூச்சி
ஞாபகம் வந்து தொலைத்தது.

◆ *காயத்ரி ராஜசேகர்*



என் அருகில் உள்ள எந்த ஊஞ்சலும்
உனக்கானதுதான்
உன்னைத்தவிர வேறு யாரும் அமர்ந்துவிடக்கூடாது
என்பதில் எச்சரிக்கையுடன் இருக்கிறேன்
நீ இல்லாத பொழுதிலும்
அமரும் எவரிடத்திலும் சண்டையிடுகிறேன்
அது உனக்கானது
உனக்கு மட்டுமானது
ஓர் ஓடக்காரன் தன் ஓடத்தை செலுத்துவதைப்
போல என்னை
செலுத்திவிட்டுதான் உனக்கானதில் அமர்வாய்
நான் இறங்கும் நேரத்தில் நீயும் இறங்கிவிடுவாய்
எனது மகிழ்ச்சியின் முடிவு
உனக்கும் முடிவாகிவிடுகிறது
அந்த பால்ய ஊஞ்சல் என்னுள் ஓயாமல்
ஆடிக்கொண்டுதான் இருக்கிறது
உனது அருகில் உள்ள அந்த நினைவு ஊஞ்சலும்
இந்நேரம் ஆடிக்கொண்டுத்தான் இருக்கவேண்டும்

◆ *அகதா*

இறுதிச் சொற்கள
இறுதி முத்தங்கள்
இறுதி சந்திப்புக்கள்
இறுதி விடைபெறுதல்கள்
இறுதிக் கவிதைகள்
இறுதி நாட்கள்

நம்மை அவ்வளவு பதட்டமடையச் செய்கின்றன
அவ்வளவு மனம் கலங்க செய்து விடுகின்றன

ஆக
இறுதி என்ற ஒன்று
நாம் இருக்கும் வரை
இல்லாதிருக்க
வேண்டும்

அல்லது
நான் எனது இறுதித் தேநீரை
அது இறுதி எனத்தெரியாமல்
அவ்வளவு ருசித்துக்குடித்த பின்
வந்து விடட்டும்!!!

◆ *ரிஸ்கா முக்தார்*



செவி நிரப்பும்
அன்புக் குரலில் கூட
மீளக்கூடும்
சில பசி மயக்கம்...

சத்தமிடாமல்
கடந்து செல்வோர்
தப்பித்தது போல்
தாண்டினாலும்
உணர்வது குற்றமென்றே
பறைசாற்றும்...

கலைத்துப் பின்
தூரப் போவோருக்கு
தண்டனையும் தரலாம்
தப்பில்லைதான்...

வெறுத்துப் பின்
ஒதுங்கிப் போவோருக்கு
என்ன சொல்லியும்
மனம் ஏறப் போவதில்லை...

ஏக்கப் பார்வையை
கண்ணில் கசியவிட்டு
பகிரக் கேட்பது
பசி ஒடுக்கும்
அவ்வேளை உணவு மட்டுமே...

வீணென்று வீசியெறிதலை
ஒழித்துவிட்டு
உண்ணென்று வழங்கிச் செல்லுதலில்
நீட்டப்படலாம் சிலரின் ஆயுள்...!

◆ *கனகா பாலன்*

மடிகொள்ளாது வளரும் பிள்ளை
என் சொல்.
என்னுடையதுமில்லை
உன்னுடையதுமில்லை
கிளைக்குச் சில மணி நேரங்கள்
காற்றுக்குச் சில நொடிகள்
அன்று
காற்றில் நீ இருந்தாய்
ஏந்திக்கொண்டாய், அவ்வளவே
இன்று
தரைக்குத் தப்பி நீர் மடியில் கிடக்கிறது
உதறிவிட்டு
நீயும் வேறுதிசையில் நடக்கத் தொடங்கு
என்னைப் போலவே.

◆ *சுப. முத்துக்குமார்*

# நிலவின் குரல்



சற்று
அமைதியாகக் கேள்

இரவில் தூறுவது
பனி என்கிறாய் நீ
அணைக்கும்
அழகிய கனவு என்கிறேன் நான்
சாட்சியாக
நனைந்த தளிர்களை
விழியால் சுட்டுகிறாய்
நானுன் விழியில் மீந்த கனவின்
ஒளியைக் காட்டுகின்றேன்

பிடிவாதமாய்
என் கனவுக்குள்
இரைதேடி வந்த
உன் இதயக்கதையை
எழுதுகிறேன்

பசுமையில் அமர்ந்தபடி
தளிர்களின் மென்மையான
பாடல்களோடு விழிக்கும்
உன் இமைகளைப்பற்றியும்
நிச்சயம் சொல்வேன்

ஆனாலும் அடம்பிடிக்கும்
பனிக்குளிரோடு
கைக்கோர்த்து நிற்கிறாய்; புரள்கிறாய்;
என் விழி நோக்கி
அனலை வீசுகிறாய்

பார்
இரவெல்லாம்
தொடரும் நமது ஊடலுக்காய்
கைத்தட்டுகிறது பௌர்ணமி

இறுதிக் குறள்
நிலவுக்குந் தெரியும்

◆ *ம.கனகராஜன்*



**க**சகசப்பான பேருந்துப் பயணத்தில்
கால்கள் வலிக்க
நின்றுகொண்டு பயணிக்கையில்
தாயின் மடியில் அமர்ந்தபடி
பார்த்துச் சிரிக்கும் குழந்தையின் சிரிப்பு இனிப்பு

வியர்வைத்துளிகள் வழிந்திறங்க வெயிலில்
நடந்துபோகையில்
எங்கிருந்தோ வந்த மேகம்
சூரியனைச் சற்றே மறைத்து
சற்று நேரம் கொடுக்கும் நிழல்
இனிப்பு

மழையில்
நனைந்தபடி நடந்துபோகையில்
குடையுடன் எதிர்ப்பட்டு
குடைக்குள் அழைக்கும்
தோழியின் அழைப்பு
இனிப்பு

உப்பை மறந்து விட்டு வந்த நாளில்
அலுவலகத்தில்
மதியச் சாப்பாட்டை
தயிரூற்றிப் பிசைகையில்
பக்கத்து இருக்கையிலிருந்து
நீட்டப்படும் உப்பு
இனிப்பு

பால்யத்தின் வீதியில்
சொந்தமாக ஒரு காற்றாடி செய்யவேண்டுமென்று
பனை ஓலையை வடிவாக வெட்டி
சுற்றும் மற்ற காற்றாடிகளைப் பார்த்தபடி
வீதியில் அலைந்து கொண்டிருக்கையில்
சிநேகிதன் நீட்டும்
பெரிய நீண்ட கருவேல முள்
இனிப்பு

சர்க்கரையால் செய்யப்படுபவை மட்டுமே
இனிப்பல்ல

◆ *சௌவி*

# அம்மிருகத்தின் பெயர்



**கா**டுகளுக்குள் திரிந்து
திசை தொலைத்து
வெளிப் பெருவெளித் தொட்டதும்
உள்ளும் புறமும் உப்பித் துப்பும்
சூரியனைக் குடித்தப் பிரகாசம்

அதற்கிணையான இன்பம்
எதில்?.
கவிதையில் தேட

காதல்
காமம்
விடுதலை
வெற்றி
காசு
புகழ்
போதை
அடுக்கிக்கொண்டே போனது கவிதை

பெருமூச்சின் துப்புதலில்
தூக்கியெறியப்பட்டோம்
முதலில் கவிதையும்
பிறகு நானும்

யதார்த்த மிருகம்
இன்னும்எங்களைப் பார்த்தபடி

அம்மிருகத்தின் பெயர்
இயற்கை

◆ *ரா.ராஜசேகர்*

# விளையும் கனவு



**தா**னிய கிடங்கு அருகே
தனியாக
தூங்கியவனுக்கு
அமோக விளைச்சல்....

வானொலி அறிவிப்பை
செவியில் கேட்கிறான்
மழைக்கு
வாய்ப்பு இல்லை.....

அறுவடைக்கு
ஆறு நாட்களே உள்ளது
டீசல் விலை
உயர்ந்து விடுமோ.....

நெல் கொள்முதல்
செய்வதற்கு
வரிசையாக
நிற்கின்றன எலிகள்.....

கோணிப்பைகளில்
பணக்கட்டுகளை
அடுக்கி வைத்து
மாட்டு வண்டி
வருகிறது....

இயற்கை விவசாயம்
எப்படியென கேட்க
தொலைக்காட்சி
நிருபர்கள்
நேரம் கேட்கிறார்கள்....

சொட்டு நீர்
பாசன முறையை
அறிந்து கொள்ள
பக்கத்து ஊர்
பண்ணையார்
கூப்பிட்டு உள்ளார்....

குளிருக்கு
விரித்து உறங்கிய
போர்வைக்குள்
அரவம் ஒன்று நுழைய
கலைந்த கனவில்
குலைந்து போனது
விளைந்த கனவு.....

◆ *ப.ராஜகுமார் சிவன்*



எல்லைக்கடந்து விரியும்
கிளைகளை வெட்டும் நீ
நீர்த் தேடி கிளைப்பரப்பும்
வேர்களை கவனி
நானொரு மரம்.

◆ ***கோ.லீலா***

மகளே என்று
கை ஏந்தும்
ஒருவருக்கு
பிச்சையிட
முடிவதில்லை
அப்பாக்கள்
அப்பாவாகவே
இருக்கட்டும்
வயிறும்
மனமும்
நிறைந்த மகிழ்வில்
வழி நெடுக
திரும்பி பார்த்துக் கொண்டே
நகர்கிறது
அப்பாவின் சாயல்..

◆ ***கார்த்திகா அ***

இருளைத் தொலைக்கும்
ஒற்றைப் புள்ளியில்
நிழலாடுகின்றேன்.
அருளிச் செய்ய
மனமிருக்கும் போது
வேறென்ன கவலை?
பொருளிலார்க்கு
இடம் தரமறுப்பது
உலகமன்று செருக்கு.
விரும்பும் வாழ்வு வசமாகும்
புள்ளியின் பரிமாணத்தில்.
குளிர் காய்ந்தும் வெம்மையுற்றும் கொள்கிறேன்
உன்னின் கீழ்.
தேயாத போதும் தேய்ந்த போதும்
ஒரே பெயராடு துலங்கும்
உன்னில் என்னையும் இணைத்துக்கொள்.
இறுதி கருந்துகள்
ஒளி வீசட்டும்.

◆ ***ப. தாணப்பன்***



என் வயதை கடித்து
வீசிக் கொண்டிருந்தேன்...
கோபத்தில் முகம் கழுவிய
வேகத்தில்
கீழே குதித்த நீர்
மண்ணில் நனைந்து கொண்டிருந்தது...
விழைந்த நெற்பயிர்களில் அமர்ந்து
உழவன் கோவணத்தை கிழித்து
வெட்டுக்கிளி பட்டம் திரிக்கிறது...
எப்போதும் பேசும் காற்று
கோரணாவின் பிரசவ வலியால்
பலி ஆடுகளை சேத்துக் கொண்டிருந்தன...
வேதம் நகர்த்தும் ஆலயத்தின்
கருவறையில் திருடன்
யாருக்கும் கவலையில்லை...
இங்கே ஒரு ஏழைக் காரி
வழியில் கிடந்த ஒரு ரூபாயை
காணிக்கை உண்டியலில்
செலுத்தி விட்டு வீடு திரும்புகிறாள்...
அவித்து கொட்ட நினைத்த
என் மூட்டையை
மீண்டும் சுமந்துகொண்டு
நடக்க தயாராகிறேன் நான்...

◆ *செந்தாரப்பட்டி இரா. செல்வக்குமார்*

"ஏ கரும்பா"
"இங்க வாடா கரும்பா"
வயதில் குறைந்த சின்ன முதலாளிகளும்
முதலாளி முடுக்கோடு அழைக்கையில்
பணிவோடு சேவகம் செய்தது
எங்கப்பனோட பெயர்...
எனக்கு வைத்த காத்தமுத்துவும்
"ஏலே காத்தமுத்து"
"ஏப்பா காத்தமுத்து"
இப்படித்தான் ஆகிப்போனது...
வெறும் பெயர் தானே என்கிறீர்கள்
இல்லையில்லை
வளைந்து வளைந்தே கூனலான
பரம்பரை அடிமைத்தனத்தின்
அடையாளம் அது
மச்சம்போல் ஒட்டிக்கொண்டதை
பிய்த்தெறிவதற்கு
தொலைதூர ஊருக்கு ஓடினேன்
பஞ்சாலை, பனியன் பேக்டரியென
ஏதேதோ வேலையில் சேர்ந்து
அங்கேயே ஒருத்தியை கட்டிக்கொண்டு
செட்டிலாகி பல காலம் கழித்தே
எட்டிப்பார்த்தேன் பிறந்த ஊரை...
"ஏலே காத்தமுத்து ஆளே மாறிட்ட"
"ஒம்பையனா இது?"
"என்னலே பேரு?"
"என்னது பிடல் செகுவேராவா?"
"வாய்க்குள்ளயே நுழையமாட்டிங்குதுலே"
மனதுக்குள் மகிழ்வோடு
"வர்றேன் மொதலாளி"
விடைபெற்றேன் நிறைவோடு
ஆம், பெயரென்பது வெறும் பெயரல்ல...

◆ *வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன்*



கடலோடு
போராடி
போராடி
வாழ்க்கையில்
போராட்டம்
என்பது பழக்கம்
ஆகி போனது....

இயற்கையின்
படைப்பில் எல்லை
என்பதே இல்லாத
பொழுது....

கடலின் எல்லை
எதுவென்று தெரியாத
பொழுது எல்லை
தாண்டியதாக கைது
செய்யத்தார்கள்....
பொறுத்து கொண்டேன்....

என்றோ ஒருநாள்
கடவுள் கொண்டு
போக வேண்டிய
உயிரை...

துப்பாக்கி
சூட்டின் மூலமோ
இல்லை
அனுதினமும்
சித்திரவதை...
அடி என்று பிரித்தார்கள்....
பொறுத்து கொண்டேன்....

என்னை போன்று
ஆயிரம் பேருக்கு
அடைக்கலம் அளித்து
உணவு தரும்
என் கடல் அன்னையின்
மடியில் உயிர்
விடுவதில்
பயம் ஒன்று
இல்லை எனக்கு....

மரணிக்கும் தருவாயிலும்
ஒற்றை கேள்வி
என்னை குடைகிறது....

இயற்கையின்
படைப்பிறகு
எல்லை வகுக்க
தடை விதிக்க
மனிதன் யார்....
யார் அவனுக்கு
உரிமை சாசனம்
எழுதி தந்தது....

விடை தெரிந்தால்
சொல்லிவிட்டு
செல்லுங்கள்....

◆ *சரண்யா*

# இரட்டை மாட்டு வண்டி



ஒரு சம்பந்தமும் இல்லை
உனக்கும் எனக்கும்.

இரட்டை மாட்டு வண்டி ஒன்றின்
ஜோடி மாடுகளாக
ஒன்று சேர்த்தது விதி.

இருவர் விருப்பமும் இல்லை
இரவும் பகலும்
இணைந்தே ஓடுகிறோம் .

யாருடைய பயணமோ நடக்கிறது.

மூட்டை மூட்டையாக ஏற்றும் சுமைகளை
மூச்சைப் பிடித்துக் கொண்டு இழுக்கிறோம்
ஆனாலும் சாட்டையடி வாங்குகிறோம்.

உன் துயரங்களை நானும்
என் வலிகளை நீயும்
வேறு யாரைவிடவும் நன்கறிவோம் என்றாலும்
அருகருகே இருக்கிறோம்
என்பது மட்டும்தான்
வாயில்லா ஜீவன்கள் நமக்கிருக்கும் ஆறுதல் .

வண்டியின் நுகத்தடியிலிருந்து
அவிழ்த்துவிடப்பட்டதும்
தீவனம் கரைத்துவைத்த தொட்டியில்
பசி தாகம் தீர்க்கும் போது
ஒருவர் கண்ணில் ஒருவர்
தெரிகிறோம் .

கலங்குகின்றன அவை
விடுதலை இல்லாப் பாட்டை நினைத்து.

அவ்வேளை ஒன்றில்
ஈ மொய்க்கும்
என் கழுத்துப் புண் கண்டு
நாவினால் நக்கி
அன்பு செய்தாயே
அது ஒன்று போதும் காயடிக்கப்பட்ட
இவ்வாழ்வுக்கு.

◆ *பிருந்தா சாரதி*



நகரத்தின் பெருமை அம்மக்களின்
கழிப்பறைகளிலிருந்து தொடங்குகிறது
மலம் கழிக்கும்போதுதான் தேவ தேவதைகள் தம்
வாசனைத் திரவியங்களைத் தூவுகிறார்கள்

அம் மணத்தில் நெய்யும் உழைத்த மக்களின்
வட்டிப்பணமும் கலந்தவாடை
எழுகிறது.
குறிப்பாக மீட்டர் வட்டி விடுபவர்களின்
அநியாயவாடையும்
மார்வாடிக்கடைகளின் தங்க அடகுவாடையும்

வங்கிவாடைகள் இரத்தச்சுவை
கொண்டவை. குளிர்ப்பதனப்படுத்தவை.

நகரத்தில் வாடகை வீடுகளின்
தீப்பெட்டிக்கழிவறைகள் நேரத்திற்குட்பட்டவை
மேலும் காகிதத்தால் துடைக்கப்பட்டவை.

தெருக்கழிப்பறைகளும் பொது
மருத்துவமனைக் கழிப்பறைகளும் இந்நகரத்தின்
கோயில்கள் என சொன்னபோது

என் கால்கவட்டையைப் பார்த்தேன்
நட்சத்திர ஓட்டலில் இருந்தாலும்
உண்மை அதுவெனத் தெளிந்தது.

ஆயினும் மனிதாபிமானக் கருத்து ஒன்று
நெற்றியிலடித்துக் கொண்டு “உடலிலிருந்து வெளி
நீண்ட மூல நோய்
காரர்களுக்கு உன் நகரம் நம்பகமானதல்ல “ என
அரற்றுகிறது

கடல் ஒன்றுதான் கழிப்பறைகளின் தாய் என்றபடி
பாதாளச்சாக்கடையில் முங்கி எழுந்தவன் மேலும்
ஒரு கோரிக்கையிட்டான்

தேசிய நறுமணம் இதுவன்றி வேறென்ன? என்று
அவன் சொன்னது.

◆ *ப்ரியம்*

# மூன்றாம் கோப்பை தேநீர்



நீ வருகிறாய்
என்பதற்காகவே
காத்திருத்தலில்
மூன்றாம் கோப்பை
தேநீர் பருகுகிறேன்.
மெல்லென படர்ந்த
அந்த இசையின் நடுவே
மிதந்த வாசனை
உன் வருகையை
உணர்த்தி விடுகிறது.
எதிரெதிர் இருக்கை.
ஒன்றும்
பேசிக் கொள்ளவில்லை ஆரம்ப நொடிகளில்.
நலம் விசாரிக்க
யார் முதலில் துவங்குவது என்கிற தயக்கம்.
அண்மை இருக்கையில் வந்தமர்வாய்
என்கிறது உள்ளுணர்வு.
மெல்லக் கிள்ளி நலமா என்பாய்
இதுவும் உள்ளுணர்வு தான்.
நான் சிரித்துக் கொண்டே
சுகம் நீ சுகமாயென்பேன்.
அடுத்தென்ன என்பதறியாமல்
அன்னங்கள் பறக்கும்
சுவரோவியத்தைப் பார்ப்பாய்.
மெல்லக் குனிந்து
என் கால் இடறிய
உன் சிறு பாதம் பார்க்கிறேன்.
நமக்குள் இருக்கும்
ஏகாந்தத்தின் இடைவெளியில்
காதல் முளை விட்டிருக்கிறது அங்கே.

◆ *மதுசூதன்*

# வகுப்பறைக்குள்ளே உலகம்



இதுதான் உலகமென
வகுப்பறைகளுக்கு வெளியே அழைத்துச் சென்று
காட்டினேன்.
ஒவ்வொருவனுக்கும் இறக்கை முளைக்கத்
தொடங்கியிருந்தது
வானவில்லில் தொங்கிக் கொண்டிருந்த ஒருவன்
உலகம் எத்துணை அழகானது என்றான்.
எதிர்காலங்களைத் தேடிய ஒருவன்
நட்சத்திரமொன்றில் நுழைந்து விட்டதாக
அறிந்தேன்

ஒருவன் காற்றோடு கதைத்துக் கொண்டிருந்தான்
இன்னொருவன் மேகத்திலிருந்து நீரை உறிஞ்சிக்
கொண்டிருந்தான்
சிகை கலைந்த ஒருவன்
மேகங்களின் மேல் அமர்ந்து கொண்டிருந்தான்
அவன் கையிருந்த தாளில் எழுத்தைத் தவிர
வேறனைத்தும் வண்ணமயமாய் இருந்தன
களவு போன இருவர்
மின்னல்களை உருவி வாட்போர் புரிந்து
கொண்டிருந்தனர்
ஒருத்தி அரிதாய் பூத்திருந்த மலர்களைக் கொய்து
கொண்டிருந்தாள்
சூரியனோடு மோதுவதாக ஒருவன்
கூவிக் கூவிக் கத்திக் கொண்டிருந்தான்

வற்புறுத்தியழைத்து வகுப்புக்குள் திணித்தேன்
ஒவ்வொருவனின் விரல் நுனியிலும்
ஒரு பூமிப்பந்து சுற்றிக் கொண்டிருக்க
இறக்கைகள் முறிந்து வகுப்பறைக்கு வெளியே
கிடந்தன

◆ *முனியாண்டி ராஜ்*

# தூதன்



நீ சொற்களை சேமி,
நீ மிகவும் அதனை விரும்பினால்.

ஆதி இசையையும் சேகரித்துவை.

மதுவின் வாசனையையும்
மாதுவின் வாசனையையும் சேமி,
நிச்சயமாக இரண்டும் ஒன்றல்ல.

உன் முன்னோர் காலத்து
நம்பிக்கை வழிபாட்டை சேகரி,
தப்பில்லை.

இப்போது நீ பயணிக்கலாம்
சூபிசத் தெருவில்,
ரூமியின் சொற்களை விடுவித்து,
உமர் கய்யாமின் வரிகளில் திளை.
நான் சொல்லிட மாட்டேன்
இவ்விரண்டும் வேறு..வேறு!

விடுவி..
சொற்களும் இசையும்
மதுவும் மாதுவின் வாசனையும்,
தீர்ந்தாகட்டும்.

கொஞ்சம் நகர்ந்து பார்
நீ ரசிப்பதும் ருசிப்பதும் ஒன்றல்ல.
வியப்பு வேணாம்,
நான் ஒரு வாசகன் மட்டுமே.
.

◆ *ஜே. பிரோஸ்கான்*



நேற்று மாலை டீ கடைக்கு சென்றபோது
ஆர்கானிக் முட்டை போண்டாவை பற்றி
கேட்டறிந்தேன்
ஒரு தத்துவத்தை ஃபேண்ட் பாக்கெட்டிலிருந்து
தவறவிட்ட இடைவேளையில்
நாட்டுச்சக்கரையின் கிருபையால்
மீண்டும் ஆர்கானிக் என்கிற வார்த்தை
என் வாழ்வின் பிளாஸ்டிக் பைகளோடு
சிக்கிக்கொண்டிருந்தன
பேப்பர் கப்பின் உள்ளிருந்து எழுந்த வந்த
குரலுக்கு
ஆர்கானிக் பாலுக்கென்று
பிரத்யேக வடிவம் ஏதும் தெரியவில்லை

அனேக இரவுகளில்
ஆர்கானிக் பற்றி நிறைய மனப்பாடம்
செய்துகொண்டேன்
மெய்மறந்து மதுவருந்திய மாலைகளில்
ஆர்கானிக் பூண்டு மிக்சரை தேடி
அலைந்திருக்கிறேன்
ஒரு தனித்த மழை நாளில்
கேரிபேக்கில் வாங்கி வந்த ஜிலேபியில்
ஏதேனும் ஆர்கானிக் இருக்கிறதா என்று
சுயபரிசோதனை செய்துகொண்டேன்

சௌகர்யமாக இருந்தவனுக்கு
உடலின் ஊழி எழுந்திட
தலைமேல் இன்று பொசுக்கென்று ஏறிக்கொண்டது
கொம்பூதிய ராஜகிரீடமாய்
ஆர்கானிக் காதல்

◆ *கோபி சேகுவேரா*

வாழ்க்கைப் புத்தகத்தின்
வெற்றுப் பக்கங்களில்
வண்ணம் தீட்டச் சொல்கிறீர்கள்....
நானோ
ஒற்றைக்குச்சியுடன்
தட்டித் தடவி
இருட்டில் பயனிக்கும்
குருட்டுப்பாடகன்...

கனவுகளில் கூட
வண்ணங்களைக்
காணமுடியாத
வரத்தைப்
பெற்றவன்...
பச்சை மஞ்சள்
சிவப்பு நீலம்
எல்லாம் எனக்கு
வெற்றுச் சொற்களே...

முடிவில்லாப் பயணத்தின்
பாதைகள் யாவும்
முட்டுச் சந்துகளாகவே
முடிந்து போகின்றன...

விடையில்லாக்
கேள்விகளைச் சுமந்து கொண்டு
எனக்கும் ஒருநாள்
விடியுமென்று
திரியும் எனக்கு
ஒவ்வொரு நாளும்
இரவாகவே விடிகிறது...

எனக்கு மட்டுமல்ல...
எல்லாக் கேள்விகளுக்கும்
எப்போதும்
மௌனமாகவே இருக்கும்
அந்தக் கடவுளுக்கும்
கண்ணில்லை...!

◆ *இளங்கோ குமாரசாமி*



தாத்தாவின் ஊர் கடக்க
முடியவில்லை
வந்து பிடித்துக் கொள்கிறார்

ஏங்கி அழுகிறார்
காய்ச்சலில் ஒருநாள் நான் துடித்தபோது
உயிரோடு அவர்
அழுத கண்ணீர் அங்கு விழுகிறது

சாப்புட்டியா சாமி
என்று சோறூட்டி விடுகிறார்
நான் பசியாறுகிறேன்
அவர் ஊட்டிவிட்ட
உணவில் பாதி சிந்தி
எறும்புகள் பசியாறுகிறது

ஏஞ்சாமி
எங்க போற என்று கேட்கிறார்
வா வென்று உயிரோடு
அவர் கைபிடித்து
வேடிக்கை காட்டிய வீதியில்
அழைத்துபோகிறார்

நுட்ப வாகனமேறி
நிலம் வானென்று பறக்கிறேன்
நினைவில் தாத்தா வந்து
தோள்மீது வைத்து தூக்கிப்போகிறார்

இறந்தால் பேயாய்
வந்து பிடிப்பார்
என்கிறார்கள்
நமக்கு பிடித்தவர்கள்
பேயாய் வந்து பிடித்தாலென்ன
சாமியாய் வந்து பிடித்தாலென்ன
பிடித்தவர்கள்தானே
பிடிக்க முடியும்
நம்மை.

◆ ***குமரன்விஜி***

அரிவாளுக்கு வாகாக
பசுந்தழையை நீட்டி
ஆட்டின் தலையை
கொய்வதைப்போல
ஒவ்வொரு ஐந்தாண்டுகளையும்
அபகரித்துக் கொள்கிறது
இலவசங்கள்
நிறத்தை மட்டும்
மாற்றிக் கொள்கிறது
உயரும் கொடிகள்...

◆ ***ஐ.தர்மசிங்***

படைப்பு பெருமையுடன் வழங்கும்



# குறில் நெடில்

விரைவில் படப்பிடிப்பு